**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF, ATTUR**

**O.S. No.57/2015**

Deposition of **P.W.-1** witnesses for Plaintiff/Defendant Solemnly affirmed by Tr. G. Mahavishnu, Gr. III Bench clerk of this court, on 10.04.2026 in accordance with the provisions of Act 1 of 1873.

Name : தங்கவேல் Father's Name :

துவக்க நேரம் : 12.39 P.M.

சாட்சி முன்னிலையானார் உறுதிமொழி செய்து வைக்கப்பட்டார்.

**வாதி தரப்பில் முதல் விசாரணை தொடர்ச்சி (I.A.4-2025 மனு அனுமதிக்கப்பட்டதன்பேரில்)**: நான் இவ்வழக்கில் வாதியின் அதிகாரம் பெற்ற முகவர் ஆவேன். வாதி தரப்பு 1-ம் சாட்சி. நான் என்னுடைய முதல் விசாரணைக்கான நிரூபண வாக்குமூலத்தை ஏற்கனவே தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் யாவும் நான் சொல்லியவை தான். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அதில் உள்ள சங்கதிகள் உண்மைதான். தற்பொழுது எனது தரப்பில் கீழ்க்கண்ட ஆவணங்களை குறியீடு செய்ய கேட்டுக்கொள்கிறேன்.

| **வ. எண்.** | **ஆவணம்** | **வகைப்பாடு** | **தன்மை** |
|---|---|---|---|
| 1. | கடந்த 13.09.1978 தேதியிட்ட பெரியண்ணகவுண்டருக்கு வழங்கப்பட்ட டி கார்டு | அசல் | **வா.த.சா.ஆ. 17** |
| 2. | 08.02.2016 தேதியிட்ட திருச்செங்கோடு வருவாய் வட்டாட்சியர் வழங்கிய சான்று | அசல் | **வா.த.சா.ஆ. 18** |

மேற்கண்ட ஆவணங்கள் வழக்கிற்காக போலியாக தயாரிக்கப்பட்ட ஆவணங்கள் என்று கூறி பிரதிவாதிகள் தரப்பில் குறியீடு செய்ய ஆட்சேபனை செய்யப்பட்டது.

**3-ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை :**

1. வா.த.சா.ஆ.15-ஆனது கடந்த 25.01.1994 தேதியிட்ட உயில் ஆவணத்தில் பெரியண்ணக்கவுண்டர், வையப்பமலை என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வையப்பமலை நாமக்கல் மாவட்டத்தில் உள்ளது என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்தானது தலைவாசல் வட்டம், மணிவிழுந்தான் கிராமத்தில் உள்ளது என்றால் சரிதான். மேற்படி உயில் ஆவணம் எங்கு வைத்து எழுதப்பட்டது என்றால் வையப்பமலை கிராமத்தில் எழுதப்பட்டது. மேற்படி கிராமம் நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு வட்டத்தில் அமைந்துள்ளது என்றால் சரிதான்.

2. மேற்படி உயிலை எழுதிய நபர் யார் என்றால் சேலம்மாவட்டம், தலைவாசல் வட்டம், பெரியேரி கிராமத்தை சேர்ந்த முத்து சாமி என்பவர் எழுதினார். திருச்செங்கோட்டில் சார் பதிவாளர் அலுவலகம் உள்ளது என்றால் சரிதான். மேற்படி உயில் ஆவணமானது திருச்செங்கோடு பகுதியை சேர்ந்த எழுத்தரால் எழுதப்படவில்லை என்றால் சரிதான், மேற்படி பெரியண்ணகவுண்டருக்கு உயிலை எழுதிய முத்துசாமி அவரை வரவழைத்து எழுதினார். வையப்பமலை கிராமத்திற்கும், பெரியேரி கிராமத்திற்கும் சுமார் 90 கி.மீ இருக்கும் என்றால் சரிதான்.

3. மேற்படி ஆவணத்தில் உயிலை எழுதிய பெரியண்ணகவுண்டர் படுத்த படுக்கையாக நடமாடாத முடியாத நிலையில் உள்ளார் என்று குறிப்பிடப்பட்டுளளது என்றால சரிதான். மேற்படி உயில எழுதப்பட்ட காலத்தில் பெரியண்ணகவுண்டர் வெளியில் எங்கும் நடமாடாத முடியாத நிலையில் இருந்தார் என்றால் சரிதான். மேற்படி உயில் எழுதப்பட்டபோது எனது பாட்டி நல்லம்மாள் மற்றும் நானும் இருந்தோம் என்றால் சரிதான். பெரியண்ணகவுண்டருக்கு உடல்நிலை சரியில்லாமல் இருந்ததால் நல்லம்மாள்தான் முன்னின்று இந்த உயிலை எழுதினார் என்றால் சரிதான்.

Typed by Selvi. C. Sasikala - O.S. No.57/2015, Dt.10.04.2026.

4. நல்லம்மாள்தான் உயில் ஆவணத்தில் கையொப்பமிட்ட சாட்சிகளான கந்தசாமி, ராஜகோபால், முத்துசாமி ஆகியோர்களை வரவழைத்து சாட்சி கையொப்பம் வாங்கினார் என்றால் சரிதான்.மேற்படி ஆவணத்தில் கையொப்பமிட்டுள்ள நோட்டரி வழக்கறிஞர் என்றால் சரிதான். மேற்படி நோட்டரி வழக்கறிஞர் கையொப்பமிட்ட இடத்தில் அவரின் பதிவு எண், வரிசை எண் மற்றும் Volume எண் எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். நோட்டரி வழக்கறிஞர், தன் முன்னிலையில் உயிலை ஏற்படுத்திய நபர் ரேகை வைத்ததாக குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான், ஆனால் அவர் முன்னிலையில்தான் உயில் எழுதப்பட்டு பெரியண்ணகவுண்டர் கைரேகை வைத்தார். உயில் எழுதப்பட்ட காலத்தில் பெரியண்ணகவுண்டருக்கு தொழுநோய் முற்றிய நிலையில் வெளியில் நடமாடத நிலையில் இருந்தார் என்றால் சரிதான். வையப்பமலைக்கும், சேலத்திற்கும் சுமார் 70 கி.மீ இருக்கும் என்றால் சரிதான். நோட்டரி வழக்கறிஞர் வையப்ப மலையில் உள்ள பெரியண்ணகவுண்டர் வீட்டிற்கு வந்து இந்த உயில் எழுதப்படவில்லை என்றால் சரியல்ல, அவர் வீட்டிற்குதான் வந்தார். மேற்படி ஆவணத்தில் வையப்பமலை பெரியண்ணகவுண்டர் வீட்டில் வைத்து நோட்டரி வழக்கறிஞர் கையொப்பமிட்டதாக குறிப்பு இல்லை என்றால் சரிதான், ஆனால் உயில் ஆவணம் அவர் முன்னிலையில் எழுதப்படுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது. நான் சொல்வது போல் நோட்டரி வழக்கறிஞர் முன்னிலையில் உயில் ஆவணம் எழுதப்பட்டது என்ற வாசகம் ஆவணத்தில் இல்லை என்றால் சரிதான் (சாட்சி ஆவணத்தை படித்து பார்த்து பின்பு பதில் அளித்தார்). நான் சொல்வதுபோல் இந்த ஆவணம் பெரியண்ணகவுண்டரால் ஏற்படுத்தப்படவில்லை என்றாலும் அதில் உள்ள கைரேகை அவருடையது இல்லை என்றாலும் மேற்படி ஆவணத்தில் கையொப்பமிட்டுள்ள நோட்டரி வழக்கறிஞரின் கையொப்பம், முத்திரைகள் ஆகியவைகள் எங்களால் தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல.

5. நான் சொல்வதுபோல் உண்மையில் நோட்டரி வழக்கறிஞர் அவரது பதிவு எண், வரிசை எண் மற்றும் Volume எண் ஆகியவைகள் முறையாக குறிப்பிடப்பட்டிருக்கும் என்றாலும் தாவா சொத்தை அபகரிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் இந்த ஆவணமானது எங்களால் தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல.

3-ம் பிரதிவாதி தரப்பு வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

முடிவு நேரம்: 01.06 P.M.

Taken down before / by me in open court and read over / interpreted to the witness and acknowledged by him /her to be correct

Sd/- D. Jansi Rani,
Principal District Munsif (FAC), Attur.

Typed by Selvi. C. Sasikala - O.S. No.57/2015, Dt.10.04.2026.